Arimaa Nokku

20 1 சனவரி 2026

ISSN 2320-4842 (Print)
ISSN 3049-2688 (Online)

# அரிமா நோக்கு
# ARIMAA NOKKU



சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணி
பிணைமான் இனிதுண்ண வேண்டி - கலைமாதன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி. (ஐந்திணை ஐம்பது 38 - மாறன் பொறையனார்)

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பண்பாட்டுக் காலாண்டிதழ்.

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE AND SCIENCE

International Research Journal Since 2007.
Peer Reviewed Refereed, International Journal

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
20:1 சனவரி - மார்ச் 2026

ஆசிரியர்
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
வெ. முருகன்
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
உ. கருப்பத்தேவன்

ஓவியர்
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

திரைப்பட, ராப் பாடல்களும் மொழி வகைகளும் - ஒரு பார்வை
சீதா லட்சுமி 05-22

நாட்டுப்புற மக்களின் விடுகதைகள் விளக்கம்
இ. சீத்தா - ஆ. பாப்பாத்தி 23-27

பழந்தமிழர் வாழ்வில் நாட்டுப்புற நம்பிக்கைகள்
கு. ரேவதி - முனைவர் ந. மு. கவிதா 28-31

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு
சு. ரகு - முனைவர் இர. சாம்ராஜா 32-36

சங்க இலக்கியமும் இயற்கை சூழ்ந்த மலைகளும்
செ. ஷீலா - முனைவர் தோ. இராஜம் 37-42

ஒன்றொழிப் பொதுச்சொல்லில் குறியீடு
செ. வசந்தி - முனைவர் ப. அலிஸ் ராணி 43-45

இராமசரிதத்தில் பழந்தமிழ் மெய்மயக்கக் கூறுகள்
அனுசுயா. இர - முனைவர் வே. இரவி 46-51

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் கூறப்படும் அன்பின் தன்மை
இ. மணிகண்டன் - மோ. மீனாட்சி 52-55

சு. சமுத்திரம் நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்
அ. ராமதாஸ் - முனைவர் ப. கோடித்துறை 56-62

தமிழ் இலக்கிய வரலாற்றில் வில்லுப்பாட்டு சார்ந்த பதிவுகள்
ஆ. மோகனலட்சுமி - முனைவர் செ. மார்க்கண்டன் 63-66

ஏற்றத் தாழ்வுக்கு எதிரான வள்ளலார்
இரா. பாரதி - முனைவர் செ. பாலு 67-70

சந்திரகாந்தன் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனை
சி. மகேந்திரன் - முனைவர் சு. இராசாராம் 71-75

ஐந்திணை எழுபது முல்லைத்திணை தலைவி கூற்றில் உவமைப் பயன்பாட்டு வரையறை
அ. அனுசங்கவி - முனைவர் மு. சுதா 76-79

திருச்சிராப்பள்ளியில் பீடித் தொழிலும் முஸ்லிம் பெண் பீடித் தொழிலாளர்களும் - அ. ஜவஹர் பாஷா
முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன் 80-84

முல்லைப்பாட்டு உணர்த்தும் தலைவன் தலைவி உறவுநிலை
ஆ. பிரவீணா - முனைவர் சொ. சுரேஷ் 85-87

பூ நெஞ்சத் தீ சிறுகதையில் சமூகமும் வாழ்வியலும்
சு. சசிக்குமார் - முனைவர் மு. சுதா 88-91

வாய்மொழி இலக்கியங்களும் வாழ்க்கை வட்டச் சடங்குகளும் - செந்துறை வட்டம்
செ. மோகன் - முனைவர் சீமான். இளையராஜா 92-95

நற்றிணையில் வகைமைநோக்கில் உள்ளுறை உவமம்
த. நந்தினிப்பிரியா - முனைவர் சா.பெரியநாயகி 96-99

சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவர்களின் முருகன் வழிபாடு
ந. தேவிகா - சு. வடிவாம்பிகை 100-105

கிராமிய விளையாட்டுகளும் சிறார்களின் வாழ்வியலும்
கா. நாகம்மாள் - முனைவர் செ. மார்கண்டன் 106-108

சிலப்பதிகார மதுரைக் காண்டத்தில் இளங்கோவின் காப்பிய நோக்கமும் பாத்திரப் படைப்புகளும் - நாகேஸ்வரி
ஸ்ரீகுமரகுரு - முனைவர் ச. செந்தில்குமார் 109-113

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கிராமிய விளையாட்டுகளும் சிறார்களின் வாழ்வியலும்

**கா. நாகம்மாள்**
முனைவர் பட்டம் ஆய்வாளர்

**முனைவர் செ. மார்கண்டன்**
இணைப் பேராசிரியர், நெறியாளர்
வேல்ஸ் பல்கலைகழகம்

**முன்னுரை**

போராட்ட வாழ்க்கை என்பது மனித வாழ்க்கையில் குழந்தைப் பருவத்திலே தொடங்கியது என்றே கூறலாம். இப்போராட்ட வாழ்க்கை பல்வேறு மாறுதல்களைப் பெற்று தலைமுறை தலைமுறையாக தொடர்ந்தாலும், இப்போராட்டத்தை தளராமல் நடத்தவும், எதிர்கொள்வதும், வெற்றியடைவதும், தோற்றால் அடுத்த போராட்டத்திற்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ளவும் சிறுவர்களுக்காக உருவெடுக்கும் விளையாட்டு தான் "கிராமிய விளையாட்டுக்கள்". இந்த கிராமிய விளையாட்டுகள் சிறுவர்களின் வாழ்வியலில் பல பக்குவங்களை கற்றுக் கொடுப்பதோடு, உடல் ஆரோக்கித்தையும், மன ஆரோக்கியத்தையும், சுறுசுறுப்பையும், இயற்கை இன்பத்தையும், அள்ளித் தருகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நம் சிறுவர்கள் விளையாடும் பண்பாடு சார்ந்த விளையாட்டான கிராமிய விளையாட்டுகளுக்கும், உலகளாவிய விளையாட்டுகளுக்கும் இடையே உள்ள நெருக்கம் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

**விளையாட்டின் பயனை உணரும் சிறார்கள்**

குழந்தைகள் விளையாடும் விடையாட்டு என்பது ஒரு வினை அதாவது குழந்தையின் செயல்திறனைக் குறிக்கும். குழந்தையின் இன்பமும், துன்பமும், தோல்வியும், வெற்றியும் சிறுவர்கள் முழு பங்களிப்பின் போதே, முழு மனநிறைவு பெற முடியும் என்பதை சிறுவர் விளையாட்டின் போது உணர்வார்கள். அவ்வாறு உணரும் போது பெரும் மகிழ்ச்சி கொள்வார்கள் என்பதையும், விளையாட்டின் தேடலைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்தலே இக்கட்டுரையின் களமாகும்.

**திறன்களை வளர்க்கும் விளையாட்டுக்கள்**

சிறார்கள் விளையாடும் போது இருவகையாக விளையாடுவார்கள். ஒன்று பெரியவர்களுடன் மனம் விட்டு விளையாடுவது, மற்றொன்று குழந்தைகள் இருவகையாக பிரிந்து, மனம் விட்டு விளையாடுவது. இவ்வாறு குழந்தைகள் மனம் விட்டுச் சிரித்து விளையாடும் போது உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி வலிமை பெறுகிறது. குறிப்பாக அம்மா, மூத்த சகோதரி இவர்களின் பங்கு, விளையாட்டில் முக்கிய இடம் பெறுகின்றது.

குழந்தைகளுக்கு அளிக்கப்படும் விளையாட்டு, பயிற்சி என தெரியாமலேயே குழந்தைகள் மன மகிழ்ச்சியுடன் கற்றுக் கொள்கின்றனர். அவ்வாறு பெறும் பயிற்சிகள் உடல் வளர்ச்சி, உடல் பலம், நடத்தல், ஓடுதல், சப்தமிடுதல், பேசுதல், கேட்டல், தன்னை அறியாமல் வாழ்வியல் பயிற்சி பெறுவதே, விளையாட்டின் தனிச் சிறப்பாக அமைகிறது.

விளையாட்டின் போதே நம் வீட்டின் பெரியவர்கள், (தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா) என

நல்லொழுக்கத்துடன், நல்ல பழக்கங்களையும் கற்றுக் கொடுத்து சிறந்த சிறார்களாகவும், நாளைய தூண்களாகவும், பண்பாட்டுடனும், வாழ்வியலைச் சிறப்பாக நடத்த சிறார்களுக்கு அளிக்கப்படும் விளையாட்டுப் பயிற்சி பெரிதும் போற்றப்பட வேண்டிய விளையாட்டுக் கலை என்றே கூறலாம்.

தன்னொத்த வயதுக் குழந்தைகளுடன் சேர்ந்து கற்றுக் கொள்ளும் வாழ்வியல் முறைகள் மிகவும் போற்றதற்குரியது. குழந்தைகளின் மனம் சார்ந்த வளர்ச்சிக்கு பயனளிக்கிறது. பெற்றோரிட மிருந்தும், ஆசிரியரிடமிருந்தும், பெரியவர்களிட மிருந்தும், கற்றுக் கொள்வதை விடத் தன் நண்பர்களிடமிருந்து பலவற்றைத் தெரிந்து கொள்கின்றனர். தான் சார்ந்துள்ள கிராமத்தின் சூழ்நிலைகள், பண்பாட்டுக் கூறுகள் இவ்விளை யாட்டுக்கள் மூலம் கற்பிக்கப் படுகின்றன.

விளையாட்டு என்பது குழந்தைக்குத் தன் உடல் சார்ந்த தேவையாகப் பயன்படுகிறது. பெரும்பாலும் குழந்தைகள் விளையாடும் தெருக்கள் அவர் களுக்கு விளையாட்டு அரங்கமாக காட்சி அளிக்கும். குழந்தை தனக்காகவும், தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்காகவும், விளையாடு வது என்று மிச்சல் எல்மர்.டி மற்றும் மாசன் பெர்னார்டு என்பவர் தம் “விளையாட்டுக் கோட்பாடு” என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளனர். விளையாட்டு என்ற கலை ஒவ்வொரு சமூகத்திலும் இயல்பாகவே அமைந்துள்ளது. இது சமூகத்துக்குச் சமூகம் வேறுபாடுகளையும், வித்தியாசமான பயன்பாடுகளையும் காட்டுகிறது. இந்த விளையாட்டுக்கள் சார்ந்தச் சமூகத்தின் மனவெழுச்சி, அறிவு, பண்பாட்டு நிலை, இயற்கைச் சூழல் இவற்றுக்கேற்பக் கட்டமைப்பும் பெறுகின்றன. விலங்குகள் போல் திரிந்த நிலை, வேட்டையாடிய நிலை, நாடோடி நிலை, கால்நடைகள் மேய்த்த நிலை. உழவுநிலை முதலியன மக்களது பண்பாடு படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது.

இவை அனைத்தும் விளையாட்டில் மிளிர்கின்றன என்பார் ஸ்டான்லி ஹால் (நாட்டுப்புற இயல் (1982:67). விளையாட்டால் ஒருவருக்கு உடலுரம், உள்ளக் கிளர்ச்சி, மறப்பண்பு, மதிவன்மை, கூட்டுறவுத் திறம், வாழ்நாள் நீட்டிப்பு முதலியன உண்டாகின்றன என்கிறார் பாவாணர். விளையாட்டானது ஒரு தனிமனிதனின் உடலியல், உளவியல், சமூக வளர்ச்சி ஆகியவற்றிற்கு உறுதுணையாக அமைகிறது என்றார் தே.லூர்து.

### கிராமிய வாழ்வை பிரதிபலிக்கும் விளையாட்டுக்கள்

“மனித வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தவை கிராமிய விளையாட்டுகள். இவ்விளையாட்டுகள் குழந்தைகளின் ஒரு வயதுப் பருவத்திற்குள்ளேயே தொடங்கி, குழந்தை உட்காரத் துவங்கியதும், பெற்றோர் அல்லது வீட்டிலுள்ள பெரியவர்களின் துணையுடன் விளையாட்டுகள் ஆரம்பமாகும். ஒரு வயதைத் தாண்டி எழுந்து நிற்கவும், நடக்கவும் ஆரம்பித்தவுடன் தன் வீட்டில் உள்ள பெரியவர்கள் ஒவ்வொரு வாழ்வியல் செயல்பாடு களையும், தன்னுள் ஆழ்மனதில் பதித்துக் கொண்டு அதனை செய்ய முற்படுகின்றனர். இதனால் தான் விளையாட்டு என்பது வாழ்க்கைக்கு பயிற்சியளிக்கும் களம் என்கிறார்” இரா.பாலசுப்பிரமணியம் “தமிழர் நாட்டு விளையாட்டுகள்” (2003:2). இக்கூற்றிலிருந்து சமூகத்தில் நிகழும் சிறார் இலக்கிய வாழ்வியலை புரிந்துகொள்ள முடிகிறது.

பெற்றோர்கள் அல்லது தாத்தா, பாட்டி போன்றோர் குழந்தைகளுடன் விளையாடும் போது, நற்பழக்கங்களையும் சேர்ந்தே கற்றுத் தருகின்றனர். உதாரணமாக “கை வீசம்மா, கைவீசு”, “சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, “சப்பாணி கொட்டம்மா,” “நண்டுறுது நரியூறுது”, “கிச்சிறு பிச்சிறு” போன்ற விளையாட்டு பாடல்களை பாடும் போதும், சில செய்கைகளைக் காண்பிக்கும் போதும், குழந்தைகள் கைகளை வீசுவதையும், உடலை அசைப்பதையும், கைகளைத் தட்டுவதையும், குலுங்கி குலுங்கிச் சிரிப்பதையும் பார்க்க முடிகிறது. குழந்தைகள் தம் உடலின் பாகங்களை அறிந்துக் கொள்வதற்கும் விளையாட்டுகள் பயன்படுகிறது என்பதை அறியலாம்.

மேலும் குழந்தைகள் நிலாவைப் பார்த்து அதன் அழகை இரசித்து “நிலா நிலா ஓடி வா” என்றும், மேகத்தைப் பார்த்து “மழையே மழையே வா வா” என்றும், “தம்பி தம்பி என்ன வேண்டும்” போன்ற பாடல்கள் உலகம் சார்ந்த அறிவு வளர்ச்சியை ஏற்படுத்துகிறது.

“கிராமிய விளையாட்டுகள் பல வீர உணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாகவும், சில மன மகிழ்ச்சியை ஏற்படுத்த கூடியதாகவும், அமைகின்றன. கிராமிய விளையாட்டுகள் உடலையும், உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகின்றன”.

“சிறார்கள் கிராமிய விளையாட்டுகள் மூலம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய பழக்க வழக்கங்களையும், சமூக மதிப்புகளையும், நியதிகளையும் குழந்தைப் பருவத்திலிருந்தே பயில்கின்றனர். உடற்பயிற்சியோடு பாடலும் பாடுவதால், ஒரே நேரத்தில் மொழியையும், உடலையும், மனப்பக்குவத்தையும் வளர்க்கின்ற னர்.

“சிறார்கள் கிராமிய விளையாட்டுகளால், உடல்

ஆரோக்கியத்துடன் சிந்திக்கும் ஆற்றலும் பெறுகின்றனர். மேலும் எதிர்காலச் சமூகப் பங்களிப்பை மறைமுகமாக உணர்ந்து கொள்ளும் விதமாகச் சிறார்களின் வாழ்வியலில் கிராமிய விளையாட்டுகள் அமைகிறது".

**சிறார்கள் விடையாடும் விளையாட்டுகள்**

பயிறுபொறுக்குதல், புளைக்காய்ப் பொறுக்குதல், வடை பாயாசம், முயல் துள்ளல், கூட்டாஞ்சோறு, தீ மூட்டுதல், தோசை சுடுதல், கோழி பற பற போன்ற சிறு விளையாட்டுகள் தொடர்ந்து, எண்ணுதல், ஓடுதல், வீட்டு வேலைகள் செய்தல், போன்ற உடற்பயிற்சியை காட்டுவதாக அமைகிறது. உதாரணமாக கீரை கடைவது போல் செய்து, பின் இருக்கும் பிள்ளைகளுக்கு உண்ணக் கொடுப்பது போல் விளையாடுவது, கீரை விளையாட்டு ஆகும். இது சிறு குழந்தைகளின் வாழ்வியலைக் குறிக்கின்றது. பெரும்பாலான குழந்தை விளையாட்டுகளில் ஆண்-பெண் பாலினம், பேதங்கள் பார்க்காமல் விளையாடுவார்கள்.

பெரியவர்களின் வாழ்வியலில் நடப்பதைப் பார்த்து சிறு குழந்தைகள் ஒன்று சேர்ந்து தங்களை பெரியவர்களாக நினைத்து, தங்களுக்குள் ஒருவரை 'நீ அம்மா', 'நீ அப்பா' இவர்கள் பிள்ளைகள் எனப் பிரித்து, அவர்கள் அமர்ந்திருக்கும் இடத்தை ஒரு வீடாகப் பாவித்து, சமைத்துப் பரிமாறி விளையாடுவார்கள். இவ்விளையாட்டை 'கஞ்சி கறி வைத்து விளையாட்டு' என்று குழந்தைகள் கூறுவார்கள். இத்தகைய விளையாட்டுகள், குழந்தைகளுக்கு தங்கள் எதிர்கால வாழ்வைத் திட்டமிடுவதற்கும், அதற்கான பயிற்சிகளைப் பெறுவதற்கும், தயார்படுத்துவதற்கும், ஆயுள் முழுக்க ஒரு மனிதன் செய்யப் போகும் காரியங்களுக்கு இத்தகைய குழந்தைப் பருவ விளையாட்டுகள் அஸ்திவாரமாய் அமைந்து, வாழ்க்கை பயணத்தைக் கற்றுக்கொள்கிறார்கள்.

சிறார்கள் விளையாடும் விளையாட்டுகளில், சிறுவர்கள் மட்டும் விளையாடும் விளையாட்டு களும், சிறுமிகள் மட்டும் விளையாடும் விளையாட்டுகளும், இரு பாலரும் இணைந்தே விளையாடும் விளையாட்டுகள் என விளையாட்டு கள் உள்ளன. பத்து வயதுக் கடந்த சிறுமிகள் பெரும்பாலும் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடக் கூச்சப்படுகிறார்கள். அந்தப் பையன் அடிப்பான்", "கெட்ட வார்த்தை பேசுவான்", "வட்டப் பேரு கூப்பிடுவான் என்றே பதில்கள் சொல்கிறார்கள்.

**முடிவுரை**

சிறுவர் விளையாட்டில் ஓடிப்பிடித்து விளையாடு தல், நொண்டி விளையாடுதல், பந்துகளைப் பயன்படுத்தி விளையாடுதல், வீட்டருகில் இயற்கையாய்க் கிடக்கும் பொருட்களைப் பயன் படுத்தி விளையாடுதல் போன்ற விளையாட்டுகளே அதிகம் குழந்தைகளிடம் இடம் பிடிக்கின்றன.

வாழ்வைப் பிரதிபலிக்கும் விளையாட்டுளைக் குழந்தைகள் மனதளவில் பக்குவப்படுகிறார்கள் யாருடன் எப்படிப் பழக வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள். ஒருவருக்கொருவர் நேசித்து விட்டுக்கொடுத்து வாழ்வது எப்படி என்பதை கற்றுக் கொள்கிறார்கள். வாழ்க்கையில் என்ன என்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதையும், நமது கடமைகள் என்ன என்பவற்றைத் தங்கள் ஆழ்மனதில் பதிய வைத்துக் கொள்ள இவ்விளையாட்டுகள் உதவுகின்றது.

சிறார்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பும், நம்பிக்கையும், பிறரோடு பழகும் பக்குவமும் வாழ்வின் இறுக்கங்களிலிருந்து விடுதலையையும் கிராமிய விளையாட்டுகள் கற்றுத் தருகின்றன. மேலும் மக்களின் அன்றைய இன்றைய காலக்கட்டத்தில் கலாச்சாரம், பண்பாடு, அரசியல் வாழ்வு, பொருளாதார தன்மை, சமூக ஏற்றத்தாழ்வுகள், சடங்குகள் ஆகியவற்றை யெல்லாம் சிறார்கள் விளையாட்டிலேயே கற்றுக் கொள்ளும் விதமாக கிராமிய விளையாட்டுகள் அமைகின்றது.

**பார்வை நூல்கள்**

1. இராமநாதன். ஆறு, நாட்டுப்புறக் கலைகள், பதிப்பு -2001, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்- 608001.
2. சக்திவேல். சு நாட்டுப்புற இயல் ஆய்வு, பதிப்பு -2001, மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 600108.
3. சண்முகசுந்தரம். க, நாட்டுப்புற இயல், பதிப்பு -1982, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
4. தேவநேயபாவாணர். ஞா, தமிழ்நாட்டு விளையாட்டுகள், பதிப்பு -2000, தமிழ்மண் பதிப்பகம், சென்னை.
5. பாலசுப்ரமணியம். இரா. தமிழர் நாட்டு விளையாட்டுகள், பதிப்பு -2003, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.